
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான இலகுவழி மாதிரிப் பரீட்சை - 04

ஆசிரியர் : P.அம்பிகைபாகன்
இடம் : ACA, ஆசிரியரின் வீட்டில்
குழு வகுப்புக்களில்

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

செங்கற்களின் அடுக்குகள் கீழேயுள்ளன. அதில் இடையில் சில செங்கற்கள் நீக்கப்பட்டு விட்டன நீக்கப்பட்ட இடைவெளி வழியே ஒருபக்கம் பார்த்தால் மறுபக்கம் தெரியும்..



1. இவ்வடுக்குகளில் ஆரம்பத்தில் வைக்கப்பட்ட செங்கற்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

   1) 150 2) 147 3) 140 4) 135

2. நீக்கப்பட்ட செங்கற்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

   1) 56 2) 52 3) 54 4) 50

3. மீதமுள்ள செங்கற்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

   1) 90 2) 91 3) 92 4) 93

மூன்று மிருகங்களின் படங்கள் கீழேயுள்ளன.


ஆடு


புலி


யானை

4. இவற்றுள் கடும்பசி ஏற்பட்டாலும் தாவரங்களை உண்ண விரும்பாத மாமிச உண்ணி எது?

   1) ஆடு 2) யானை 3) புலி 4) ஒன்றுமில்லை

5. இவற்றுள் மனிதர்களுக்கு குடிப்பதற்கு பால் தரும் விலங்கு எது?


   1) ஆடு 2) யானை 3) புலி 4) அனைத்தும்

6. இவற்றுள் மனிதர்களுக்கு கடினமான வேலைகள் செய்வதற்கு உதவுவது எது?

   1) ஆடு 2) யானை 3) புலி 4) மூன்றும்

வகுப்பு ஒன்றில் உள்ள மாணவர்களில் 12 மாணவர்கள் இறைச்சி உணவை விரும்பி உண்பார்கள். 8 மாணவர்கள் தாவர உணவை விரும்பி உண்பார்கள், இவர்களுள் 3 மாணவர்கள் இரு வகையான உணவுகளையும் விரும்பி உண்பார்கள்.

7. மேலுள்ள தகவல்களை வென்வெரிப்படத்திலுள்ள புள்ளிக்கோடுகளில் எழுதிப் பூரணமாக்குக.



8. ''சின்னஞ்சிறு குருவி போல நீ திரிந்து பறந்து வா பாப்பா'' இவ்வரிகளில் யாருக்கு யாரை உவமையாக கூறப்படுகிறது

(.....)

www.ikedu.lk

9. ''காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு''. இவ்வரிகளில் ஓய்வு, இரக்கம், அன்பு போன்ற குணங்களை உண்டாக்குவது எதுவெனக் கூறப்படுகின்றது

(.....)

10. ''காலை'' என்ற சொல்லை வாக்கியங்களில் இரு கருத்துக்களில் பயன்படுத்தலாம். ஒன்று காலைப்பொழுது மற்றையது யாது?

(.....)

இவ் விவரணத்தை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நான் நண்பர்களோடு மாலையில் விளையாடிக்கொண்டிருக்கும் போது தீடிரென ஒரு கூக்குரல் ஒலி கிளம்பியது. சனங்கள் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடுவதைக் காண்கின்றேன். உடனே நண்பர்களும் நானும் ஓடத்தொடங்கினோம். எமக்கு முன்னாலும் பலர் ஓடிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் மேலே பெரிய புகை மண்டலம் ஒன்று கிளம்பி ஆகாயத்தை நோக்கி எழுகின்றது. உடனே வேகத்தை நாம் துரிதப்படுத்தியோடினோம். நாங்கள் அணுக அணுக நெருப்பு சுவாலைவிட்டு எரிவது கண்ணுக்குப் புலப்படுகிறது. வீடொன்று தீப்பிடித்துக்கொண்டுள்ளது என்று உணர்ந்து அவ்விடத்தை அண்மித்தோம்.

11. இங்கு நாளொன்றின் எவ்வேளையில் நடந்த நிகழ்வு கூறப்படுகின்றது.

(.....)

12. இப்பந்தி வாக்கியங்கள் எக்காலத்தை உணர்த்துகின்றன?

(.....)

13. பின்வரும் சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துச் சொற்களை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1. விரைவு ..... 2. சினேகிதர்கள் .....
3. மக்கள் ..... 4. அவலச்சத்தம் .....

14. சொற்களை பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.
செய்கின்றனர் / எல்லோரும் அந்த நெருப்பை / இயன்ற முயற்சிகளைச் / அணைப்பதற்கு தம்மால்.

.....

ஒரு பாடசாலையில் மாலை வேளை நடைபெற்ற பல்சுவை நிகழ்ச்சி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

பி.ப 2.00 - 2.50	தரம் 5	மாணவர்களின் நாடகம்
பி.ப 2.50 - 3.00	தரம் 4	மாணவனின் பாடல்
பி.ப 3.00 - 3.30	தரம் 11	மாணவிகளின் நடனம்
பி.ப 3.30 - 5.00	தரம் 10	மாணவர்களின் விவாதப்போட்டி
பி.ப 5.00 - 5.30	தரம் 8	மாணவர்களின் நாடகம்

15. குறைந்த நேரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி யாது? (.....)

16. நீண்ட நேரம் நடைபெற்ற நிகழ்ச்சி யாது? (.....)

17. சமமான நேரங்களை எடுத்து கொண்ட இரு நிகழ்சிசிகள் எவை?


(.....)

18. இந்நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் செலவாகிய மொத்த நேரத்தை நிமிடங்களில் மாத்திரம் எழுதுக?

(.....)


www.ikeau.lk

சில வடிவங்கள் குறித்து நிற்கும் பெறுமதிகள் கீழே தரப்பட்டுள்ளன.



பின்வரும் சமன்பாடுகளுக்கு பொருத்தமான வடிவங்களை மட்டும் புள்ளிக்கோடுகளில் கீறுக.

19. ..... + ... = 

20. ..... - ..... = 28 + 

பின்வரும் வாக்கியங்களில் எப்பொழுதும் உண்மையானால் 1 எனவும், சிலவேளைகளில் மட்டும் உண்மையானால், 2 எனவும் எப்பொழுதும் உண்மையல்லாததாயின், 3 எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.

21. குதிரைக் கொம்பு மானின் கொம்பை விட நீண்டு வளர்ந்து வளைந்திருக்கும். (.....)

22. மனிதர்கள் நூறு வயது வரை உயிர்வாழ்கின்றனர். (.....)

23. வான வில்லில் ஏழு நிறங்கள் காணப்படும். (.....)

பின்வரும் விவரத்தை வாசித்து 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்கு விடையை தெரிவு செய்க.

1 கிலோகிராம் அரிசி	500 கிராம் கடலை	ரூபா	100.00
1 கிலோகிராம் கடலை	500 கிராம் பருப்பு	ரூபா	160.00
1 கிலோகிராம் அரிசி	500 கிராம் சீனி	ரூபா	70.00
2 கிலோகிராம் அரிசி		ரூபா	80.00

24. 1 கிலோகிராம் கடலையின் விலை யாது?
1. ரூபா 120.00 2. ரூபா 80.00 3. ரூபா 60.00 4. ரூபா 40.00

25. ஒரு கிலோகிராம் பருப்பின் விலை யாது?
1. ரூபா 60.00 2. ரூபா 80.00 3. ரூபா 40.00 4 ரூபா 30.00

26. ஒரு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு அதன் வெள்ளிவிழா 2000 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அவ் வேளை அவ்விழாவில் பங்குபற்றிய லதாவின் வயது 12 ஆகும். அந்நிறுவனத்தின் நூற்றாண்டு விழா நடைபெறும் போது லதாவிற்கு எத்தனை வயதாகும்?
1. 100 வயது 2. 75 வயது 3. 87 வயது 4. 38 வயது


27. மூன்று குயவர்கள் மூன்று மணித்தியாலங்களில் முப்பது பானைகள் செய்வார்கள். ஆகவே ஒரு குயவர் இருபது பானைகள் செய்வதற்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவாகும்?
1. 2 மணித்தியாலங்கள் 2. 3 மணித்தியாலங்கள்
4. 5 மணித்தியாலங்கள் 4. 6 மணித்தியாலங்கள்

28. நான்கு மாணவர்கள் பாடசாலையிலிருந்து புறப்பட்டு விளையாட்டு மைதானத்தை அடைவதற்கு 8 நிமிடங்கள் செலவாகியன. ஒரு மாணவன் மாத்திரம் பாடசாலையிலிருந்து புறப்பட்டு விளையாட்டு மைதானத்தை அடைய எத்தனை நிமிடங்கள் செலவாகும்?
1. 2 நிமிடங்கள் 2. 4 நிமிடங்கள்
3. 1 நிமிடம் 4. 8 நிமிடங்கள்

29. ஒரு வகுப்பில் உள்ள 4 நண்பர்கள் தமக்கிடையில் ஒருவருக்கொருவர் கைகுலுக்கிக் கொண்டார்கள். அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்களின் எண்ணிக்கை யாது?
1. 4 2. 6 3. 8 4. 16

www.ikeu.lk

உருவில் உள்ள எண் யந்திரம் செலுத்தும் எண்ணை 3 இனால் பெருக்கி கிடைக்கப்பெறும் விடையிலிருந்து 2 ஐக் கழித்து வரும் விடையுடன் 5 ஐக் கூட்டித் தரும்.



30. இவ்வியந்திரத்தினுள் 2 ஐச் செலுத்தினால் கிடைக்கும் விடை யாது?
1. 7 2. 8 3. 9 4. 10

31. இவ்வியந்திரத்தின் மூலம் 18யை விடையாகப் பெறுவதற்கு உட்செலுத்த வேண்டிய எண் யாது?
1. 3 2. 5 3. 7 4. 4

சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது இடுக.

32. தாமரை இலை மேல் நீர் முத்துக்கள் போன்று பளபளப்பதற்கான காரணம்
1. நீரின் கண்ணாடித் தன்மை 2. தாமரை இலையின் எண்ணெய்த்தன்மை.
3. நீரின் கசியும் தன்மை. (.....)

33. இரவு நேரங்களில் கடலிலிருந்து தரை நோக்கி காற்று வீசுவதற்கான காரணம்
1. தரை இரவிலும் சூடாக இருக்கின்றமை.
2. கடல் இரவிலும் சூடாக இருக்கின்றமை.
3. கடலிலிருந்து காற்று எவ்வேளையும் தரைநோக்கித் தான் வீசுகின்றது. (.....)

34. பசுவிலிருந்து பால் கறக்கும் போது கன்றை பசுவிற்கு அருகில் வைத்திருப்பதற்கான காரணம்
1. பசு கன்றை நினைத்து பாலைச்சுரக்கும்.
2. பசுவிற்கு கன்று மேல் பாசமுள்ளமையினால்.
3. பசு கன்றுக்கு பயப்படுவதனால். (.....)

பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

35. நல்லபிள்ளை பெயருக்கேற்ற குணமுள்ளவள், சொன்னபடி நடப்பவள், வாக்கு மறாதவள், ஊரில் அவளை எல்லோரும் மெச்சினார்கள். நல்லபிள்ளையைக் குறிப்பிட மிகப் பொருத்தமான சொல்
1. மரியாதையானவள் 2. நாகரீகமானவள்
3. நாணயமானவள் 4. பொய் சொல்லாதவள்

36. பொன்னம்மா ஆச்சியின் கணவர் நீண்ட நாட்களாக நோயுற்று இருந்து கடந்த வருடம் இறந்து விட்டார். தற்பொழுது பொன்னம்மா ஆச்சியைக் குறிப்பிட பொருத்தமான சொல்.
1. சுமங்கலி 2. விதவை 3. ஏழை 4. நோயாளி

37. 'முன்னவர் நாட்டிய மரங்களிலே பின்னவர் பழங்கள் பறிக்கின்றார்', எனும் கூற்றில் முன்னவர் பின்னவர் என்பது குறிப்பது
1. பாட்டன், பேரன் 2. அண்ணன், அக்கா
3. கணவன், மனைவி 4. அவன், அவள்

விளக்கங்களுக்கு பொருத்தமான பழமொழிகளைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்	பேராசை பெரு நட்டம்
பணிவு வெற்றி அளிக்கும்.	ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது
சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்	திக்கற்றவனுக்கு தெய்வமே துணை

38. அனுபவம் அற்ற அறிவு பயன்படாது.
.....

39. கதி அற்றோர்க்கு கடவுளே துணை.
.....

40. அதிக ஆசை தீமை விளைவிக்கும்.
.....

www.ikedu.lk

மாதிரிப் பரீட்சை 4

1. 2
2. 3
3. 4
4. 3
5. 1
6. 2
7. 9, 3, 5
8. பாப்பாவை குருவிக்கு
9. பாட்டு
10. மனித உறுப்பு
11. மாலை
12. இறந்த, நிகழ்காலங்கள்
13. வேகம்,நண்பர்கள், சனங்கள், கூக்குரல்
14. எல்லோரும் அந்த நெருப்பை அணைப்பதற்கு தம்மால் இயன்ற முயற்சிகளைச் செய்கின்றனர்
15. பாடல்
16. விவாதப்போட்டி
17. நடனம்,நாடகம்
18. 210
19. ◯ + ▭
20. ◯ - ▭
21. 3
22. 2
23. 1
24. 1
25. 2
26. 3
27. 4
28. 4
29. 2
30. 3
31. 2
32. 2
33. 2
34. 1
35. 3
36. 2
37. 1
38. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது
39. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
40. பேராசை பெரு நட்டம்

www.lkedu.